Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சனிக்கிழமை 19 ஒகஸ்ட் 2023

ஆவணி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# மீண்டும் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஒக. 19
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக, கணிதப் புள்ளி விவர »11



குருந்தூர்மலையில் நேற்று

# தடைகளைத் தாண்டி பக்திபூர்வ பொங்கல்!

முல்லைத்தீவு, ஒகஸ்ட் 19
முல்லைத்தீவு குருந்தூர்மலையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆதிசிவன் ஐயனாருக்கு நேற்றுப் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. »11

## வழிபாடு தொடரும்

### ரவிகரன் தெரிவிப்பு

முல்லை., ஒக. 19
'பொலிஸார் மற்றும் சாநதபோதி தேரர் ஆகியோருடைய குழப்ப முயற்சிகளைக் கடந்து குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. »11



## குருந்தூர் பக்தர்கள் மீது 'கண்'வைத்த பொலிஸ்

முல்லைத்தீவு, ஒக. 19
முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நேற்றைய தினம் பொங்கல் வழிபாடுகளில் கலந்துகொள்வதற்காகச் சென்றவர்கள் பொலிஸாரால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டனர்.
குருந்தூர்மலைப் பகுதியிலும், அதற்கான பாதைகளிலும் கண்காணிப்புப் பணியில் சுமார் »11

## தேரர் மீது முறைப்பாடு

முல்லைத்தீவு, ஒக. 19
குருந்தூர்மலையில் தமிழர்களின் வழிபாடுகளுக்குக் குழப்பம் விளைவித்த தேரருக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தனியாக நடத்தத் திட்டமிட்ட பொங்கல் வழிபாட்டுக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் தடைபோட்டதால், தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராகவும் பொலிஸாரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் முறையிட்டார். (அ-ம-246,19)

## பெண் சடலமாக மீட்பு!

மன்னார், ஒக. 19
மன்னார், வங்காலைப் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
22 வயதுடைய குடும்பப்பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »12

## பொங்கலைக் குழப்ப பிக்கு நேற்றும் முயற்சி

### மக்கள் கொதிப்படைந்ததால் பரபரப்பு

முல்லைத்தீவு, ஒக. 19
குருந்தூர்மலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பொங்கல் வழிபாட்டைக் குழப்புவதற்கு கல்கமுவ சாந்தபோதி தேரர் முயற்சி மேற்கொண்டபோதிலும் அது பயனளிக்கவில்லை. தமிழ் மக்கள் ஒருமித்து எதிர்ப்பை வெளி »11

## ஏட்டிக்குப் போட்டியாக விகாரையிலும் வழிபாடு!

முல்லைத்தீவு, ஒக. 19
முல்லைத்தீவு குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட சம நேரத்தில், அந்தப் பகுதியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள »11



போதைக்கு அடிமையானதால்

## கூலிப்படையாகச் செயற்பட்ட ஒன்பது பேர் நேற்றுக் கைது

### குற்றத்தடுப்புப் பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம், ஒக. 19
யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீடு களுக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொள்ளுதல், பெற்றோல் குண்டு வீசுதல், பொருள் »11

# கச்சதீவை மீட்போம்!

### மீனவர்கள் முன்பாக ஸ்டாலின் சபதம்

சென்னை, ஒக. 19
இலங்கை அரசாங்கத்திடமிருந்து கச்சதீவு மீட்கப்பட்டு, தமிழக மீனவர்களின் உரிமை நிலைநாட்டப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார்.
இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் மீனவர் மாநாடு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் »12



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*நிதி கிடைக்கப்பெறாமையால்*

# புதைகுழி தோண்டல் பிற்போடப்பட்டது



**முல்லைத்தீவு, ஓக. 19**

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கான நிதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு இதுவரை கிடைக்கப் பெறாமையால் எதிர் வரும் 21 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்தவாறு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைக்குழி அகழ்வு தொடர்பிலான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது தொல்பொருள் திணைக்களத்தினுடைய முல்லைத்தீவு வலயப் பொறுப்பதிகாரி ஆர்.ஜி.ஜே.பி.குணதிலக வால் அகழ்வுப் பணிக்கு ஆறு வாரங்களுக்கு 1.2 மில்லியன் ரூபா தேவை என்று நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி கிடைக்கப்பெறாமல் அதனுடைய வேலைகளை ஆரம்பிக்க முடியாது என்று சட்ட மருத்துவ அதிகாரியால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னணியில் உரிய நிதி கிடைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக 15 நிமிடங்கள் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் நீதிமன்றம் ஆரம்பமாகி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், மாவட்டச் செயலகத்துக்கு இதுவரை நிதி கிடைக்கவில்லை என்பதை தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டதன் அடிப்படையில் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த தன்படி 21 ஆம் திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்றும் இந்த அகழ்வுப்பணிகள் தொடர்பாக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இலங்கை மின்சாரசபை, கரைதுறைப்பற்று பிரதேசசெயலர், கரைதுறைப்பற்று பிரதேசசபையினுடைய செயலர், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினுடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் , தொழில்நுட்ப உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களத்தினு டைய அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதி காரிகள், கொக்கிளாய் பொலிஸ் நிலைய அதிகாரிகள், தடயவியல் பொலிஸார், காணாமற்போனோர் அலுவலகத்தினுடைய பிரதிநிதி கள், கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியினுடைய கிராம அலுவலர் உள்ளிட்ட தரப்பினர் அனைவரையும் அடுத்த தவணையில் மன்றில் பிரசன்னமாக உத்தர விடுமாறும் அவர்கள் அனைவருடனும் கலந்துரையாடி உறுதியான தீர்மானத்தை எடுத்து அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று சட்ட மருத்துவ நிபுணர் வாசுதேவா தெரிவித்தார்

இதனடிப்படையில் வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டதுடன் அன்றைய தினம் அனைவரையும் மன்றில் முன்னிலையாகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## குடிதண்ணீருக்கு இலங்கை நெருக்கடி எதிர்கொள்ளும்



கொழும்பு, ஓக. 19

இலங்கை எதிர்வரும் ஆண்டுகளில் மிகப் பெரிய குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் என சிறிஜயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் மூத்த விரிவுரையாளர் மேத்திக்கா விதானகே எச்சரித்துள்ளார்.

'காலநிலை மாற்றமே தட்டுப்பாட்டுக்கான முக்கியமான காரணம். இலங்கையின் மழைவீழ்ச்சிக் காலங்களில் ஏற்கனவே மாற்றங்கள் தென்படத்தொடங்கிவிட்டன. வழமையாக வருடாந்தம் இலங்கையில் 2 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் மழை பெய்யும். மே முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியே அதிகளவு மழைக்காலம். காலநிலை மாற்றம் காரணமாக மே மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் மழைபெய்யலாம். நாங்கள் இதனை எதிர்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும். குடிநீர்த் தட்டுப்பாடு என்பது தவிர்க்கமுடியாதது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## புலிகள் இருந்தபோது சமஷ்டி; இப்போது எதுவும் தரமுடியாது

*அரசாங்கத்துடன் பேசுவதில் அர்த்தமுள்ளதா? கேள்வி எழுப்புகிறார் சுரேஷ்பிரேமச்சந்திரன்*

போர் நடைபெற்றபொழுது தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குவதற்குத் தயாராக இருந்தவர்கள் போர் முடிந்த பிறகு எதனையுமே கொடுக்கக்கூடாது என்ற நிலைக்கு வருவதாக இருந்தால் இவர்களுடன் பேசுவதில் அர்த்தம் ஏதும் இருக்கிறதா என்று எண்ணத்தோன்றுகின்றது.

- இவ்வாறு ஜனநாயகதமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இப்பொழுது பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்றுவதா இல்லையா என்ற கருத்தாடல்கள் ஒருபுறமும் பதின்மூன்றிலிருந்து எவற்றையெல்லாம் நீக்கிவிடலாம் என்ற கருத்தாடல் இன்னொருபுறமும் பதின்மூன்று என்பதே வேண்டாம் தமிழ் மக்கள் வாயைப் பொத்திக் கொண்டிருந்தால் போதுமானது என்ற சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதிகள் மற்றொருபுறமும் இருந்துகொண்டு பதின்மூன்றாவது திருத்தம் என்பது பந்தாடப்படுகிறது.

குறைந்தபட்சம் இலங்கைக்கு ஒரு பொருளாதார மீட்சி ஏற்பட வேண்டுமாக இருந்தால், இந்தியாவும் உலக நாடுகளும் இலங்கைக்கு உதவி செய்கின்ற இந்த வேளையில், நாட்டில் நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவான மொழியில் எடுத்துரைக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் கொடுக்கின்ற உதவிகளும் விழலுக்கிறைத்த நீராகி விடும் - என்றுள்ளது. (ஒ-100)

*காலநிலை மாற்றம்:*

## சிறுவர்களிடையே நோய்கள் பரவல்!



கொழும்பு, ஓக. 19

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர்கள் பல்வேறு வகையான நோய்த்தாக்கங்களால் பாதிப்புறுகின்றனர். பெற்றோர் சிறுவர்களின் நலனில் கூடுதல் அக்கறை செலுத்தவேண்டும்.

இவ்வாறு பொரளை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது நாட்டில் வறட்சிநிலை காணப்படுகின்றது. அதனால் தூசி காரணமாக சிறுவர்களுக்கு மூச்சுத்திணறல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் ஏற்படுகின்றன. மூச்சுத்திணறல் உள்ள குழந்தைகளுக்கு இருமல் ஏற்படுவதுடன் மூச்சு விடுவதிலும் சிரமமும் ஏற்படும்.

இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக தமது பிள்ளைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அத்துடன் உடலில் நீர்ச்சத்தைக் குறையவிடாது பாதுகாக்க நீராகாரங்களை அதிகளவில் உட்கொள்ள கொடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய மாதாந்தக் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், ஓக. 19

ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களிடம் அறவிடப்படும் மாதாந்தக் கட்டணத்தை உயர்த்தி அவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் இருமடங்காக அதிகரிக்கப்படும் என்று யாழ்.மாவட்டக் கிளை தெரிவித்துள்ளது.

நிதிய அங்கத்துவ ஓய்வூதியர்களின் சம்மதத்துடன் தற்போது மாதாந்தக் கட்டணமாக 50 ரூபா ஓய்வூதியத்தில் அறவிடப்பட்டு வருகிறது. இந்தத் தொகையை 100 ரூபாவாக அதிகரித்து அவர்களுக்குக் கிடைக்கும் நலன்களையும் இருமடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-ரி3-9)

## வரி வருமான உயர்வுக்கு வரிச்சட்டம் மறுசீரமைப்பு

கொழும்பு, ஓக. 19

இந்த ஆண்டு முடிவுக்குள் உரிய இலக்குகளை எட்டவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது. அதற்கமைய அரசவரிப் பொறிமுறையை மேம்படுத்தும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் விரைவில் திருத்தம் செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டுவருதல், வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்தல் மற்றும் அரசவரிவருமானத்தை அதிகரித்தல் ஆகிய விடயங்களில், அரசாங்கம் எதிர்பார்க்கும் இலக்குகளுக்குச் செல்ல முடியுமா? என்பது தொடர்பில் குழு ஆராய்ந்து வருகின்றது.

இந்த இலக்குகளையும் இவ்வருட இறுதியில் அடைய வேண்டியுள்ளது. அரசவரி வருமானத்தை அதிகரிப்பதைத் தவிர ஏனைய இலக்குகளில் ஓரளவு திருப்திகரம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் வரிக்கொள்கை தொடர்பில், கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வரி செலுத்த வேண்டியவர்கள் பல்வேறு மேன்முறையீடுகளை முன்வைத்து வருமானத்தை சரியாக கணக்காய்வுக்கு உட்படுத்தாமல், வரி செலுத்துவதை தவிர்த்து வருகின்றனர்.

வரிசெலுத்துவது குறித்து முன்வைக்கக் கூடிய நான்கு மேன்முறையீடுகளை இரண்டாகக் குறைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வருமான வரி ஒழுங்காக வசூலிக்கப்பட்டால் வெளிநாடுகளிடம் கடன் பெற வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படாது.

முறையான கணக்காய்வுகளின் ஊடாக வரி வருமானத்தை அதிகரிப்பது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சிந்தித்து வரி வருமானத்தை வசூலிப்பதற்கு சரியான பொறிமுறையை வகுக்கவேண்டும் - என்றார். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்கு மாரடிக்கும் சச்சியின் கூட்டத்துக்கு

# குருந்தூர்மலைபற்றிக் கதைக்க எந்தவொரு அருகதையுமில்லை

## கஜேந்திரன் எம்.பி. சாடல்

**யாழ்ப்பாணம், ஓக. 19**

**சச்சிதானந்தத்தோடு சில இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாக உள்ளனர். அவர்கள் குருந்தூர்மலை பற்றி கதைக்க அருகதையற்றவர்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

குருந்தூர்மலையில் சிவன் கோவில் கட்டுவது என்ற தீர்மானத்தை சில இந்து - பௌத்த மதத்தலைவர்கள் இணைந்து எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டமைதொடர்பில்ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 'இந்தியாவின் உளவுத்துறையினுடைய (றோ) தூதுவராக இருக்கக்கூடிய சிவசேனையினுடைய இலங்கைப் பிரதிநிதியான சச்சிதானந்தம் குருந்தூர் மலை தொடர்பில் கருத்துச் சொல்வதற்கு எந்த அருகதையும் இல்லை. இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலே மதரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்ட ரீதியிலே மதவெறிக் கருத்துகளை சிவசேனை பரப்பிவருகின்றது. திட்டமிட்ட பௌத்தமயமாக்கலுக்கு முழுமையாக துணைபோகும் விதமாக சச்சிதானந்தத்தின் கருத்துகள் அமைந்திருக்கின்றன. அங்கு அவரோடு சென்றிருந்த சில இந்துசமயத்தைச் சார்ந்தவர்களும் கூலிக்கு மாரடிப்பவர்களாக, இனத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாக செயற்படுகின்றார்கள். பௌத்த ஆக்கிரமிப்புக்கு ஆரியகுளம் விகாராதிபதி துணை போகக்கூடாது. அவரோடு தமிழ் மக்கள் நல்லுறவோடு வாழ விரும்புகிறார்கள். அவர் சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு விகாராதிபதிகளை அழைத்து கூட்டம் நடத்துவது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது' - என்றார். (ஒ-இ)

# சட்டவிரோதமாக மீன்பிடிகள் தடுக்க நடவடிக்கை இல்லை!

## சிறுதொழிலாளர்கள் பாதிப்பு

கடல்வளத்தைப் பாதிக்கக்கூடிய சட்டவிரோத மீன்பிடி முறைகளான சுருக்குவலை, இழுவைப் படகு உள்ளிட்டவற்றால் உள்ளூர் சிறுதொழிலாளர்கள் மீன்பிடித்தொழிலை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது வளத்தையும் எம்மையும் சாகடிக்காது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் மதியழகன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: வடமராட்சி கடற்பரப்புகளில் தற்போது சுருக்குவலைத் தொழில் தீவிரமாக இடம்பெற்று வருகிறது. அதிகளவிலான சிறிய மீன்கள் அந்த வலைகளில் அகப்படுவதால் பாரம்பரிய மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுகிறது - சந்தைவாய்ப்பு இழக்கப்படுகிறது. சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடுவோர் வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், டைனமற் அடித்தல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளால் கடல் வாழ் உயிரினங்கள் அழிகின்றன. இதனை ஏன் உரிய அதிகாரிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை? - என்று கேள்வி எழுப்பினார். (ச-27)



### மோ. சைக்கிளை தீயிட்ட விஷமிகள்

சாவகச்சேரியில் வீடொன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத விஷமிகள் அங்கிருந்த மோட்டார்சைக்கிளைஎரியூட்டிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை தாமோதரம்பிள்ளை வீதி சங்கத்தானையில் நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2-159)

# 'பழைய இரும்புதானே திருடர்கள் எடுக்கட்டும்'

## பொலிஸார் உதாசீனம்; மாங்கொல்லை மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 19

காங்கேசன்துறை மாங்கொல்லையில் இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் திருடர்கள் வீடுகளை உடைத்து இரும்புகளை திருடிச் செல்கின்றனர். பொலிஸார் திருட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காததால் இரும்புத் திருடர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள்மேலும்கூறுகையில், உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லையில் இராணுவம் வெளியேறிய போதும் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.



காணி உரிமையாளர்கள் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

இதனை சாதகமாக்கி அந்தப் பகுதிக்குள் ஊடுருவும் இரும்புத் திருடர்கள் வீடுகளை உடைத்து இரும்புகளைத் திருடிச் செல்கின்றனர்.

அந்தப் பகுதியில் கண்காணிப்பு சுற்றுக்காவலில் ஈடுபடும் பொலி ஸார், "பழைய இரும்புகள்தானே, அவர்கள் எடுத்துச் செல்லட்டும்'' என்று பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கின்றனர்.


பிரதேச செயலரிடம் தெரிவித்த போது, "இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக இந்தப் பகுதியை கையளிக்காததால் நாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது" என்று கைவிரிக்கிறார். பொறுப்பு வாய்ந்தோரே இவ்வாறு தெரிவிக்கையில் நாம் யாரிடம் சென்று முறையிடுவது? என்று கேள்வி எழுப்பினர். (ச-27)




குருந்தூரில சிவன் கோயில் கட்ட அங்கயுள்ள விகாராதிபதி சம்மதிச்சிட்டார் எண்டு ஆரிய குளத்து 'மச்சப் பார்ட்டியில' சிலோன் சிவசேனைச் சச்சி சொன்னவரெல்லோ.அப்பிடிச் சொன்னதுக்குப் பின்னாலதான் பெரும் சதியொண்டு புதைஞ்சு போய்க்கிடக்கு. இப்ப சிவசேனைச் சச்சியை இயக்கிறது , ஆமியிட்ட காசுவாங்கிக் கொண்டு இஞ்ச சாதிப்பிரச்சினை நெருப்பை மூட்டிவிட நினைக்கிற கும்பல்தான். அந்தக் கும்பலும் குருந்தூருக்குப் போய் 'இஞ்ச விகாரைதான் இருந்தது. சிவன்கோயில் இருக்கேலை' எண்டு வீடியோ விட்டது. அந்தக் கும்பலின்ர ஏவுதலிலதான் சச்சியரும் அவரின்ர சிவசேனையும் ஆடுகினம். இப்பத்தைச் சதிக்கும் அவைதான் மூலகாரணமாம். கருவிதான் உந்த சிவசேனக்காரர்.

முதல்ல உந்தக் குருந்தூரிலகட்டுறவிகாரையே சட்டத்துக்குப் புறம்பானது. கோர்ட்ஸ் தடை போட்டபிறகும், அதைமீறி ஒரு விகாரையைக் கட்டிமுடிச்சுப் போட்டு, அங்க காலங்காலமா இருந்த ஆதிசிவனுக்கு கோயில் கட்ட 'பெர்மிசன்' தாற அளவுக்கு விகாராதிபதிக்கு அதிகாரம் இருக்கோ?சிலோன் சிவசேனையின்ர சீதன உரித்தோ குருந்தூர்மலை? குருந்தூர்மலை பற்றி அந்தக் கோயில்காரர் தானே முடிவெடுக்கோணும். கோயில்காரரை விட்டிட்டு என்னெண்டு சச்சியாக்கள் போய் , இப்பிடி ஒரு கூட்டம் வைச்சு, முடிவெடுக்க முடியும்?

முந்தநாள் சச்சியர் சொன்னமாதிரி சிவன் கோயில் உண்மையா குருந்தூர் மலையில கட்டுப்படாது. 'எங்கட ஆக்களுக்கு ஒரு கோயிலை அங்கினைக்கு எங்கையும் கட்டிக் குடுத்தா, பிரச்சினை எழும்பாமல் அமத்திப் போடலாம். நாங்கள் எங்க கட்டுறமோ அங்கதான் ஐயனார் இருந்தவரெண்டு சொல்லுறதும் கஷ்டமில்லை. விகாரைக்கும் பிறகு எதிர்ப்பு இருக்காது' எண்டு இவ்வளத்துக்கும் பிளான் போட்டுக் குடுத்தது உந்த சிவசேனையார் தானாம். அதுக்குத்தான் அண்டைக்கு 'றெக்கி' பார்க்க உவையள் குருந்தூருக்குப் போனவையாம். விகாரைக்கு எட்டவா உள்ள ஒரு காணிக்குள்ள, ஐயனாரின்ர சூலத்தைப் பிடுங்கி வைச்சிட்டால், கோயிலும் கட்டினமாதிரிப் போடும், பிக்குவையும் மனம் குளிர்வைச்சதாப் போடுமெண்டதுதான் சிவசேனையின்ர சதிக்கணக்கு. அதுக்குதான் மணித்தியாலக் கணக்கில மீட்டிங். எல்லா இந்து அமைப்புகளும் சேர்ந்துதான் இந்த முடிவை எடுத்தம் எண்டு சொன்னால், எல்லாரும் வாய் பொத்திக்கொண்டு இருப்பினமெண்டு அவை நினைச்சிருக்கினம்போல. எந்தக் காணிக்கையாவது கட்டுறதெண்டால் எப்புவோ அங்கத்தைச் சனம் கோயிலைக் கட்டியிருக்குமே? ஐயனாரைக் கலைச்சுப் போட்டு அந்த இடத்தில விகாரை கட்டக்கூடாது எண்டுதானே இவ்வளவு போராட்டமும். உள்ளி கண்ட இடத்தில பிள்ளை பெறுறமாதிரி, கண்ட காணிக்கை ஐயனாரைத் தூக்கிக்கொண்டுபோய் வைக்கேலாதெண்டது, சுரணை கெட்டவைக்கு தெரியாதுதானே.




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்காபிஷேகம்

கொடிகாமம், ஓக.19

எழுதுமட்டுவாழ் அருள்மிகு ஸ்ரீ கரம்பகப் பிள்ளையார் ஆலயத்தின் இரண்டாம் வருட மணவாளக்கோல நாளான இன்று சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (ச-ரி-159)



தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (66)



மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவும் அலங்கார வளைவு திறப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை ஆலயத்தின் திருவிழா பிரதம குரு சண்முகநாதக் குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றன. (ச-ரி3-213)

## அமரர் சிவமகாராசா நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.19

தெல்லிப்பழையில் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அமரர் சி.சிவமகாராசாவின் 17 ஆவது ஆண்டுநினைவேந்தல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ந.உமாகரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில்பிரதம விருந்தினராக தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர் இ.சிவரூபன், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர் சா.செ.இளங்கோவன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-ரி-66)

## பெரியபுலம் ம. வித்தியாலய ஆண்டு நிறைவில் பேரணி



யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாகனப் பேரணியொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் பாடசாலை முன்றிலில் பேரணியை ஆரம்பித்து வைத்திருந்தார். தொடர்ந்து வாகனப் பேரணி யாழ்ப்பாணத்தின் பல இடங்களையும் சுற்றிவந்து நிறைவடைந்தது.

பேரணியில் மாணவர்களின் பாண்ட் வாத்தியங்கள் இசைக்கப்பட்டதுடன் பாரம்பரிய கலைநிகழ்வுகளான மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்டவையும் இடம்பெற்றன. (ச-ரி3)

## நெடுந்தீவில் நல்லிணக்க நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 19

நெடுந்தீவு பிரதேச செயலகம் நடத்தும் 'நல்லிணக்கத்துக்கான எதிர்காலத் தலைவர்கள்' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் சத்தியசோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண தேசிய மொழிகள் சம ஒருமைப்பாட்டு அலகின் பொறுப்பதிகாரி ந. உமாகரன் பங்கேற்கவுள்ளார். (ச-ரி3-9)

## 'கைலாய அந்தாதி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 19

மகாராஜா ஸ்ரீராஜசேகராவால் பதிப்பிக்கப்பட்ட சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி செராசசேகரனின் 'கைலாய அந்தாதி' நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலி.மேற்கு பிரதேசசபை சங்கானை நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கூட்டுறவு ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர் எ.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை முன்னாள் தலைவர் தா.கந்தசாமி பங்கேற்கவுள்ளார்.

நூலின் நயவுரையை பொறியலாளர் மு.தில்லைநாதன், சைவப் புலவர் வெற்றிவேல் சக்திவேல் ஆகியோரும் ஏற்புரையை மகாராஜா ஸ்ரீராஜசேகராவும் ஆற்றவுள்ளனர். (ச)

## திறப்பு விழா

கொடிகாமம், ஓக.19

அமரர்கள் மார்க்கண்டு - நாகம்மா தம்பதியர் ஞாபகார்த்தமாக ஆனைபிறவு நடராஜர் சிலையடி முன்பாக பேருந்துத் தரிப்பிடம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்துத் தரிப்பிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ரி-159)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி ஏற்படும். விற்பனையில் லாபம் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த காரியம் முடிவது மகிழ்ச்சி தரும். பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். லாபம் கிடைப்பதற்கு கூடுதலாக உழைக்க வேண்டும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுஎடுப்பதை தவிர்ப்பது நல்லது. அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். துர்க்கையை வழிபடுவது நன்று.

## யாழ். பல்கலையில் 'மைமல் பொழுது' உரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.19

வடமாகாண நீர் உரையாடல் வட்டம், இளைய நீர்துறைமையாளர் வடக்கு வட்டம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஆகியவை இணைந்து நடத்தும் 'மைமல் பொழுது' உரையாடல் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4.30மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் 'அளவிடல் கண்காணித்தல் மூலம் நிலத்தடி நீர்வளம் பேணலில் மக்கள் மைய நடவடிக்கைகள்: இந்திய அனுபவங்கள்' என்ற தலைப்பில் வளவாளராகப் பங்கேற்கும் முனைவர் ஜோகேஷ் ஜடேஜா கருத்துரை வழங்கவுள்ளார். (ச-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பொங்கலில் பல்லிளித்த நல்லிணக்கம்

நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் விளக்கமளித்துக்கொண்டிருந்த காலத்தில்தான், இலங்கைத் தீவு என்றுமே மீளெழ முடியாத சகதிக்குள் புதைந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பேரினவாதிகள் முரசறைந்து கொண்டிருந்தனர். 'தமிழ் மக்களுக்கு அதிகாரம் பகிரப்படக்கூடாது. இந்த நாட்டில் இரண்டாம்தர பிரஜைகளாகக்கூட இல்லாமல் அடிமைகளாகத்தான் தமிழர்கள் வாழ முடியும்' இந்தச் சிந்தனையோட்டமே கடந்த சில வாரங்களாக தென்னிலங்கையில் ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதையே அங்கிருந்து ஒலிக்கும் குரல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பதைப்போல குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடு நடத்துவதற்கு ஏராளம் முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. தமது தாயகத்தில் தங்கள் ஆதிசிவனாருக்குப் பொங்கல் வைப்பதற்கும் தமிழர்கள் கையேந்தி நிற்கின்ற அவலம் நடந்தேறியது. பேரினவாதிகளின் கூக்குரலுக்கு மத்தியிலும் பொங்கல் நேற்றுச் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. பொங்கல் நடந்தேறி விட்டது என்பதற்காக அதையொட்டி கட்டவிழ்ந்த விடயங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் இருக்க முடியாது. இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மருந்துக்கும் இல்லையென்னும் அளவுக்கு விவகாரங்கள் அரங்கேறி யிருந்தன.

பொங்கலுக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் அனுமதி கொடுத்ததும் அவரை நாடாளுமன்றம் என்ற சிறப்புரிமைக் கவசத்துக்குள் நின்றுகொண்டு போட்டுத் தாக்கினார் சரத் வீரசேகர. அவரைத் தொடர்ந்து முற்றும் துறந்த புத்தனுக்கு பூசை செய்வதாகச் சொல்லும் பிக்குகள் தங்கள் ஆட்டத்தைத் தொடங்கினர். பொங்கல் நடத்துவதாக தமிழர்கள் ஆயத்தங்களை மேற்கொள்ள, பிக்குவோ 'குருந்தி விகாரையைக் காக்க அணிதிரளுங்கள்' என்று சிங்கள மக்களை நோக்கி போர்க்காலத்தொனியில் அழைப்பு விடுத்தார். போதாதற்கு உதய கம்மன்பில போன்றோரும் சிங்கள மக்களை குருந்தூரில் குழப்பம் விளைவிக்கவென அணிதிரட்டினர்.

இந்த அணிதிரட்டல்களை அடிப்படையாக வைத்து கடந்த முறையைப் போன்று பொங்கலுக்கு தடையைக் கேட்டனர் பொலிஸார். கலவரத்தை திட்டமிட்டு முன்னெடுப்பதற்கு ஒரு தரப்பு முயலும்போது அவர்களைத் தடுப்பதை விடுத்து அமைதி வழியில் நடக்கவிருக்கும் பொங்கலுக்குத் தடை கேட்பது பொலிஸ் திணைக்களத்தின் பௌத்த – சிங்கள இனவாத முகத்தையே எடுத்துக்காட்டுகின்றது. இதேயிடத்தில் சிங்களவர்களின் வழிபாட்டை தமிழர்கள் குழப்பப்போகின்றார்கள் என்றால் பொலிஸ் திணைக்களம் சிங்களவர்களின் வழிபாட்டை நிறுத்துவதற்கு நீதிமன்றில் தடை கேட்குமா? அல்லது தமிழர்களுக்கு எதிராகத் தடையுத்தரவு கேட்குமா? தமிழரின் வழிபாட்டுரிமை மறுப்புக்கு நீதிமன்றம் தடைவிதிக்க மறுத்ததைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் எப்படிப் பொங்கவேண்டும் என்பதற்கு 7 கட்டளைகளை விதித்தது.

பொங்கலை குழப்பவேண்டும் என்ற பௌத்த – சிங்களப் பேரினவாதிகளின் குரல்களைச் செயற்படுத்த இலங்கை அரசாங்கத்தின் திணைக்களங்கள் எப்படி வாலாட்டுகின்றன என்பதற்கு அந்த நிபந்தனைகளே தக்கசான்று.

'நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடும் திறந்தவெளியில் பொங்கலிடவேண்டும். தொல்பொருள் அல்லாத மணல், கல், செங்கல் போன்றவற்றை வைத்து அதன்மேல் தகரம் வைத்து அதன்மேல்தான் தீமூட்டவேண்டும். வனத்துறையினரின் பாதுகாப்புக்கு உட்பட்ட இடமாகவும் இந்தப்பகுதிகள் இருப்பதால் வனத்துறையின் அறிவுறுத்தலும் பெறப்பட வேண்டும். தொல்பொருள் சின்னங்கள் மீது உணவு, பழம், தேங்காய் உள்ளிட்டவற்றை வைக்கக்கூடாது. தொல்பொருள்களில் தேங்காய் உடைத்தல் அல்லது பால் போன்ற திரவப்பொருள்களைத் தெளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது' ஆகிய நிபந்தனைகளையே தொல்லியல் திணைக்களம் விதித்திருந்தது.

நேற்றையதினமும் விகாராதிபதி பொங்கலை குழப்ப முயன்றிருக்கின்றார். அதேவேளை ஒரு பொங்கல் பானையை மாத்திரமே வைத்துப் பொங்கலாம் என்று தொல்பொருள் திணைக்களம் நேற்றுப் புதிதாக ஒரு நிபந்தனையையும் விதித்திருந்தது. இவை எல்லாவற்றையும் அனுசரித்து பொங்கி முடித்திருக்கின்றார்கள். ஆனாலும் பொங்கலுடன் நடந்தேறிய நிகழ்வுகள் எல்லாம் இந்த நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கம் ஏற்படாது என்பதையும் இரு தேசங்களாகவே இருக்கமுடியும் என்பதையும்தான் உணர்த்தி நிற்கின்றன.

### நாளொரு நல்வார்த்தை

"உனது கற்பனையை முதலீடாக நீ முன்வைத்தால் அது உனக்கு வாழ்க்கையில் பல வெற்றிகளைத் தேடித் தரும்"

– அப்துல் கலாம்




ஆரம்ப வகுப்புகளில்

# 85 வீத மாணவருக்கு கல்வியறிவு இல்லை!

யுனிசெப் தகவல்

கொழும்பு, ஓக. 19

**இலங்கையில் தரம் மூன்றில் கல்விபயிலும் 85 வீதமான மாணவர்களுக்கு எழுதுவதற்கு - வாசிப்பதற்கு திறமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். தெற்காசிய நாடுகளிலேயே கல்விக்கு குறைந்த தொகையை ஒதுக்கும் நாடாக இலங்கையே காணப்படுகிறது என்று யுனிசெப் சுட்டிக்காட்டியுள்ளது.**

யுனிசெப் நிறுவனமும் கல்வித் திணைக்களமும் இணைந்து ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையில் தரம் மூன்றில் கல்விபயிலும் 85வீதமான மாணவர்கள் வாசிப்பு, எழுத்து, எண்கள் போன்ற விடயங்களில்புலமையின்றி காணப்படுகின்றனர். இது அவர்களின் இரண்டாம் நிலைக் கல்வியில் - வாழ்க்கையில் - தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பின்தங்கிய பகுதிகளிலும், மலையகத்திலும் உள்ள மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இது தொடர்பில் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக ஒன்பது மாகாணங்களிலும் தொழில்நுட்ப ரீதியான குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-6)

## நிபந்தனைகளின் கீழ் மின்கொள்வனவு

வறட்சி காரணமாக மின்உற்பத்தி வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மின்சாரத்தைத் தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்யவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. இதனையடுத்து ஆறு மாதத்துக்குள் 100 மெகாவோட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சாரசபைக்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-இ)

## 13ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு

*மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்*

மட்டக்களப்பு, ஓக. 19

முஸ்லிம்களின் காணிகளை பராமரிப்பதற்குத் தடையாக இருப்பவர்கள், முஸ்லிம்களின் கச்சைத் துணிகளைகூட உருவிவிட்டு அனுப்பக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டாம் என்று மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, நாவலடி பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் முஸ்லிம் மக்களுக்கும் உரிமைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நிராசையாக போய்விட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

(ஒ-இ)

| நாளை | 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஆவணி 03 | சுபநேரம் : 09.05 – 10.35<br>ராகுகாலம் : 04.35 – 06.05<br>நாகசதுர்த்தி விரதம் |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்கள் பகிர்வு



கொழும்பு, ஓக. 19

**ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரங்களைப் பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

காலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான எமது நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. ஒற்றையாட்சிக்குள் 13 ஐ அடிப்படையாகக் கொண்டு அதிகாரப்பகிர்வு இடம்பெறும். மக்களின் இறைமை பாதுகாக்கப்படும். அரசமைப்பில் பௌத்தமதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை காக்கப்படும். ஏனைய மதங்களுக்குரிய உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

நாட்டில் இனங்களுக்கிடையில் ஐக்கியம் இருந்தால்தான் தேசியப் பாதுகாப்புப் பலமாக இருக்கும் - என்றார். (ச-இ)

## உற்பத்தித்திறன் விருத்திக்கு ஆணைக்குழு உருவாக்கம்!

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 19

நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைப்பதற்கு - கடன் மறுசீரமைப்புகளில் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீன நிறுவனமாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதித்துள்ளது.

மறுசீரமைப்புகளின் பயன்களை உயர்த்தி மறுசீரமைப்புகளில் இடைக்கால மற்றும் நீண்டகால நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதாரத்தின் சகல பிரிவுகளிலும் உற்பத்தித்திறனை விருத்தி செய்ய வேண்டும். ஆய்வுகள் மூலம் உருவாகின்ற சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் கொள்கை விதிகள் அரசுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

உற்பத்தித்திறன் தொடர்பான பிரச்சினைகளை முறைசார்ந்த வகையில் செயற்படுத்துவதற்காக சட்டரீதியாக பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனமொன்று நாட்டில் இல்லை. அதற்கமைய சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் கொள்கை விதிகளை அரசுக்கு பரிந்துரைப்பதற்காக சுயாதீன நிறுவனமாக தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

குறித்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான விடயங்கள் பற்றி ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு நிபுணர்குழு நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-இ)

## இந்த ஆண்டில் இதுவரை 73 மருந்துகள் தரமற்றவை!

### மருத்துவ விநியோகப் பிரிவு தகவல்



கொழும்பு, ஓக.19

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 73 மருந்துகள் தரமற்றவையென பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மருந்துகளில் 45 மருந்துகள் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டவை. 17 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை. ஏனையவை பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன எனத் தெரிய வந்துள்ளது.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில் சில திரும்பப் பெறப்பட்டுமுள்ளன. இது 2017 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அதிகபட்ச எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது.

அதேவேளை 2022 ஆம் ஆண்டில் 86 மருந்துகள் தரச்சோதனையில் தர மற்றவை எனத்தெரியவந்துள்ளது என்றும் மருத்துவ விநியோகப் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (ச-ரி2)

## வறட்சியால் தண்ணீரின்றி 6000 யானைகள் தவிப்பு!

### வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் வனவிலங்கு காப்பகங்கள் மற்றும் காடுகளில் 6 ஆயிரம் யானைகள் வரையில் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன. சுமார் 450 யானைகள் உயிரிழக்கும் நிலையில் தவிக்கின்றன என வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நயனக ரன்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உடவலவ பூங்காவிலுள்ள காடுகள் மற்றும் மகாவலி ஆற்றின் அனைத்துப் பகுதிகளிலும் நீர்ப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. அது யானைகளுக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை ஒவ்வொரு வருடமும் வறட்சி காலத்தில் வனவிலங்கு திணைக்களம், யானைகளின் வாழ்விடங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதற்கும், கிராமங்கள் மற்றும் வனப் பூங்காக் களைச் சுற்றி மின்சார வேலிகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ச-ரி2)

## பாலியல் தகவலைப் பெற கூகுள் படிவம் தயாரிப்பு

### மோசடி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 19

பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் தனிப்பட்ட பாலியல் தகவல்களை கூகுள் படிவம் தயாரித்து பெறப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது. களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெண்களின் பாலியல் நடத்தை மற்றும் அணுகுமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி இணையத்தில் கூகுள் படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் கூகுள் படிவத்தின்படி தங்களின் தனிப்பட்ட பாலியல் தகவல்களைப் பகிர்ந்துள்ளனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தரவுகளை கூகுள் நிறுவனத்திமிருந்து பெறுவதற்கு நீதிமன்றிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஓக. 19

பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையமொன்றை அம்பாந்தோட்டையில் நிறுவுவதற்காக இலங்கை முதலீட்டுச்சபை அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏற்றுமதிச் சந்தைக்காக மாத்திரம் நாளொன்றுக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் பரல்கள் கொள்ளவுடன் கூடிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையமொன்றை அமைக்கவுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 50 வருட நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் ஆயிரத்து 200 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் பற்றி கருத்திட்ட முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## முன்பள்ளியிலிருந்து பாலியல் கல்வியறிவு

கொழும்பு, ஓக. 19

அனைத்து மாணவர்களுக்கும் பாலுறவு அறிவை பெற்றுக்கொடுக்க அடுத்த மாதம் முதல் பாலியல் கல்வியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு அடிப்படைக் காரணம் பாலியல் கல்வி தொடர்பான சமூகத்தின் போதிய அறிவின்மையே.

அந்தவகையில் பாலியல்சார் அறிவை மாணவர்களிடையே விதைக்க தேசிய கல்வி நிறுவகத்தால் பாடசாலை குழந்தைகள் மற்றும் பிற தர மாணவர்களுக்கென 14 புத்தகங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மருத்துவர்கள், குழந்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சகம் மற்றும் சுகாதார அமைச்சக அதிகாரிகள் ஆதரவு அளித்துள்ளனர்.

அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே நேரத்தில் புத்தகம் அச்சிடுவது கடினம். அதனால் மாணவர்கள் முதலில் 'ஒன்லைன்' ஊடாக புத்தகத்தைப் படிக்க வாய்ப்பளிக்கப்படும். பாடத்திட்டத்தை தயாரிப்பதற்கான முன்னேற்றம் குறித்து அடுத்த நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலருணவுப் பொதி வழங்கல்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி வடக்கு மற்றும் அராலி மேற்கு ஆகிய பகுதிகளில் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய உலருணவுப் பொருள்கள் அடங்கிய இப்பொதிகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அப்பகுதிகளுக்குச் சென்று வழங்கி வைத்துள்ளார். (ய-27)

யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தனது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். (ய-26)





# முன்மாதிரி செயல்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசசெயலர் அலுவலகத்துக்கு மிக அண்மித்துள்ள பாலத்தின் புனரமைப்புப் பணி பல வருடகாலமாக இடைநிறுத்தப் பட்டிருந்தது.

இதனால் மக்கள் தற்காலிகப் பாதையைப் பயன்படுத்தி வந்தனர். தற்காலிகப் பாதையும் மக்கள் பயணிக்கமுடியாத நிலையை அடைந்தது.

இதனால் கடந்த மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தருமபுரம் பகுதி இளைஞர் அணியினர் ஒன்றுதிரண்டு கிரவல் மூலம் தமது சொந்த நிதியைப் பயன்படுத்தி தற்காலிகப் பாலத்தின் சேதமடைந்த பகுதிகளை புனரமைத்து பணியைச் செய்து இலகு போக்குவரத்துக்கு வழிசமைத்தனர். (ய-113)

# 'ஊர் கூடி உண்டு மகிழ்வோம்'



கிளிநொச்சி - கண்டாவளை பகுதியில் அமைந்துள்ள ரூபன் விளையாட்டு மைதானத்தில் 'ஊர் கூடி உண்டு மகிழ்வோம்' விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் 13ஆம் திகதி இடம்பெற்றது. (ய-113)



போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் மென்திறன் விருத்தி தொடர்பான அரங்காற்றுகை செயற்பாடு அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் க.இ.கமலநாதன் வளவாளராக கலந்துகொண்டார். (ய- 159)



சாவகச்சேரி பிரதேசசபையின் ஆடிப் பிறப்பு நிகழ்வும் மகளிர் தின நிகழ்வும் கடந்த மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் சுயதொழில் முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (ய-159)



சாவகச்சேரி கண்டுவிலில் 30 வருடமாக செயற்பட்டு வரும் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய புனரமைக்கப்பட்ட கட்டடம் கடந்த மாதம் 24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. (ய-...)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை வித்தியாலய முதல்வர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெற்றது (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னேற்றத்துக்கு சீனாவின் முதலீடுகள் அவசியம்

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் சீனாவின் முதலீடுகள் மிகவும் முக்கியமானவை. சீனாவிடமிருந்து இலங்கைக்கு அதிக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம். இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

சீனாவின் குன்மிங்கில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் சீனா மிகவும் தேவையான ஆதரவை வழங்கியுள்ளமையை நாங்கள் பாராட்டுகிறோம். எதிர்காலத்தில் இலங்கையின் பரந்த பொருளாதாரக் கொள்கையில் சீனா தொடர்ந்து ஒத்துழைப்பையும் நெகிழ்வுத்தன்மையையும் வழங்கும் என்று நம்புகிறோம். இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு சீனாவின் முதலீடுகள் மிகவும் முக்கியமானவை. சீனாவிடமிருந்து இலங்கைக்கு அதிக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம் – என்றார். (எ-இ)


### கார்/ வான் குத்தகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள்/ வான்கள் மாதாந்த குத்தகைக்கு தேவை.

**077 839 5849**

### வேலையாட்கள் தேவை

- தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
- கணிய அளவியலாளர் (QS) (Experience with Bill and BOQ preparing)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணிய அளவியலாளர் (Trainee)
- கணக்கு உதவியாளர் (Account Assistant) (பெண்கள் மட்டும்)

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

**077 2100 740**

Mail : bestbuilders1983@hotmail.com


### யாழ் வணிகர் கழகம்

2023 ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் கம்பனிப்பதிவுச் செயலாளரின் அனுமதியுடன் 16.09.2023 அன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே வணிகர்கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

திகதி - 16.09.2023 சனிக்கிழமை
நேரம் - காலை 10.30 மணி
இடம் - யாழ் வணிகர் கழகப் பணிமனை, 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ் வணிகர் கழகம்

(CR 40459)M-1

### விழிநீர் சொரிகின்றோம்

ROHINI Speak up English Academy யில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய

**திரு. இராமசாமி சண்முகசுந்தரம் (சண் Sir)**



அவர்கள் இறைபதம் எய்தினார் என்ற செய்தியறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

பிரிவுத் துயரில்

ROHINI Speak up English Academy
Anandamanai, Vathiry, Karaveddy.

### கமத்தொழில் காணிவரைபு (வயல்) பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவைத்தல் மற்றும் திருத்தத்தின் பொருட்டுஉரிமை/எதிர்ப்பு விண்ணப்பப்படிவங்கள் கையேற்றல்

2011ஆம் ஆண்டு 46ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்தி சட்டத்தின் 53(1) பிரிவிற்கு அமைவாக கிளிநொச்சி கமநல சேவைகள் நிலைய அதிகார எல்லைக்குட்பட்ட விவசாய கிராமங்களான

| | | |
|---|---|---|
| KN/20 - | திருவையாறு | - கமக்கார அமைப்பு மகிழங்காடு |
| KN/23 - | கிளிநகர் | - கமக்கார அமைப்பு மருதநகர், |
| KN/24 - | மருதநகர் | - கமக்கார அமைப்பு மருதநகர் மகிழங்காடு, சின்னக்காடு |
| KN/25 - | பன்னங்கண்டி | - கமக்கார அமைப்பு பன்னங்கண்டி சின்னக்காடு, மகிழங்காடு |
| KN/29 - | கணேசபுரம் | - கமக்கார அமைப்பு கணேசபுரம் |
| KN/31 - | பெரியபரந்தன் | - கமக்கார அமைப்பு D5 RB1, D5 LB2, D5LB1D6D7 |

மேற்குறிப்பிட்ட கிராமசேவையாளர் பிரிவுரீதியாக தயாரிக்கப்பட்ட வயல்காணி வரைவு பதிவேடுகள் பொதுமக்கள் பார்வைக்காகவும். திருத்தத்திற்காகவும் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் 27.07.2023 தொடக்கம் 31.08.2023 திகதிவரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்தகாலப்பகுதியினுள் குறித்தகாணி உரிமையாளர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் அல்லது தகவல் வழங்குனர்கள் வயற்காணி (வரைபு) பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆட்சேபனைகளை (எதிர்ப்பு/உரிமை எதிர்ப்பு) தெரிவித்துக்கொள்ளமுடியும் என்பதனைதயவுடன் அறியத்தருகின்றேன்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
கமநல சேவைகள் நிலையம்
கிளிநொச்சி.

### மரண அறிவித்தல்

தோற்றம் 20 02 1939



மறைவு 13 08 2023

**திருமதி இராசம்மா அப்பாத்துரை**
(இளைப்பாறிய ஆசிரியர், நயினாதீவு )

யாழ் நயினாதீவை பிறப்பிடமாகவும் கொக்குவில், கொழும்பு, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா அப்பாத்துரை அவர்கள் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நாகபூஷணி அம்பாள் திருவடியை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (வ.க) இளைய நாச்சியார் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற R. R. அப்பாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சுந்தரேசன் (UK), வாகீசன் (UK), தியாகேசன் (அவுஸ்திரேலியா), அநுசூயா (கனடா), கஸ்தூரி (கனடா), அழகேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி, அனுஷா, கோணேஸ்வரி, பாலேஸ்வரன், அருட்செல்வன், அபர்ணா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கந்தசாமி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், விஜயரெத்தினம், பூமணி, கணேசன் மற்றும் குணரெத்தினம், பவானி, காமாட்சிசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் சங்கரி, சௌமியா, சஞ்சுதா, உமை, கணன், சுபானு, கௌசிகன், அபிராமி, அஷ்வினி, வர்ஷனி, அஞ்சனா, அரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் Monday August 21 st 1.00 pm at Highland Hills Crematorium, 12492 Woodbine Ave, Gormley, ON இல் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

78, மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு.

தகவல் : திருமதி லலிதா நாகையா (பெறாமகள்)
021 205 2315

### மரண அறிவித்தல்

தோற்றம் 12 12 1981



மறைவு 01 08 2023

**திரு. நடராஜா நந்தகுமார்**
(பிரபல தவில் இளவரசன்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராஜா நந்தகுமார் கடந்த (01.08.2023) செவ்வாய்க்கிழமை லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் தவில் கச்சேரிக்குச் சென்றவேளை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அவரது ரசிகப் பெருமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
பானுஷன் (மகன்)
077 385 8010

(CS/51715)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமாகும் மருந்துத் தட்டுப்பாடு சுகாதார அமைச்சரை மாற்றுக

## வவு.வில் மக்கள் போராட்டம்

வவுனியா, ஓக. 19

நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட வழிவகுத்துள்ள சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை மாற்றி மருந்துத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வுகாணுங்கள் எனக் கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வவுனியா பொது மருத்துவமனைக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

அரச மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு தீவிரமடைந்து நோயாளிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அண்மைக்காலமாக மருத்துவமனைகளில் தரமற்ற மருந்துகள் காரணமாக மரணங்களும் பதிவாகி வருகின்றன. முதியவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பலரும் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். இந்த அரசாங்கத்திடம் சிறந்த திட்டங்கள் இல்லை. மக்களை வறுமைக்குள் தள்ளி நோய்நொடிகளை உண்டாக்கி மருத்துவமனையை நாடும் நிலையை ஏற்படுத்தியுள்ள அரசாங்கம், மருத்துவமனைகளிலும் மக்கள் மரணிக்கும் அவலத்தையே ஏற்படுத்தியுள்ளது. மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதுடன் சுகாதார அமைச்சரையும் மாற்றி மக்களுக்கு நன்மைபயக்கும் வகையில் அரசு செயற்பட வேண்டும் - என்றனர்.

(ச-110)




சேவை நலன் பாராட்டு




திருமதி. ஜெயானந்தகுமாரி சரவணபவஜயர்

நியமனம் 14.12.1994 ஓய்வு 19.08.2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் சிரேஸ்ர போதனா ஆசிரியையாக சேவையாற்றி ஓய்வுபெறும் திருமதி ஜெயானந்தகுமாரி சரவணபவஜயர்அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு அவரின் ஓய்வு காலத்தில் சகல நன்மைகளையும் பெற்று சௌபாக்கியமாக வாழ வாழ்த்துகின்றோம்.

Best wishes

உடற்கல்விச் சமூகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## சிறிலங்கா கிரிக்கெட்

# நாடாளுமன்றில்24இல் விவாதம்

கொழும்பு, ஓக. 19

சிறிலங்காகிரிக்கெட்சபைதொடர்பில்நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிக்கையொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் கடந்த 11ஆம் திகதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அது குறித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் பிரகாரம், எதிர்வரும் 24ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

(அ-ம)


தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer) தேவை

பகுதி நேரம் / முழுநேரம்


- குடிசார் பொறியியல் வேலையில் அனுபவம் (Technical knowledge and experience) உள்ளவர்கள்.
- தொழில்நுட்ப கற்கைநெறியை முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- சுயவிபரக்கோவைகளை கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு 25.08.2023 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

coljoujob@gmail.com





மரண அறிவித்தல்



தோற்றம் 14 07 1944

மறைவு 18 08 2023

அழகரத்தினம் பாலசுப்பிரமணியம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் பாலசுப்பிரமணியம் (வசாவிளான் மத்திய மகா வித்தியாலய காவலாளி) அவர்கள் 18.08.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினம் பொன்னுபிள்ளையின் அன்புமகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை தங்கச்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணி மற்றும் இராஜேஸ்வரியின் கணவரும் தருமராசா, தருமலிங்கம் (ஜேர்மன்), காலஞ்சென்ற தருமகிருஸ்ணன் மற்றும் தர்சினி (பிரான்ஸ்), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகலா, சுபாஜினி (ஜேர்மனி), குகனேசன் (பிரான்ஸ்), சாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமதம்பி, சிவராசா, சுந்தரமூர்த்தி, குணரட்ணம் மற்றும் செல்வராசா இராஜலட்சுமி, தவமணி, காலஞ்சென்ற முருகையா மற்றும் செல்வரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், தர்ஷிகன் (பொறியியலாளர்), தர்ஷிகா (வழக்கறிஞர்), கஜீபன், தர்ஷினி (ஆசிரியை), முகேஷ், யானுகா, யனுஷ், சுஷான், சானுஷா, லுவிஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது சகோதரர் செல்வராசா அவர்களது இல்லத்தில் பன்னாலையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுப்பிரமணியம் கோவிலடி,
பன்னாலை, தெல்லிப்பளை.

தகவல் : குடும்பத்தினர்
077 066 4791, +33652488859

(CS 28801) M-1



பொன்னாலை
ஸ்ரீவரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்
ஆவணி மகோற்சவ கடைகளுக்கான
ஏலம்

மேற்படி ஆலய ஆவணி மகோற்சவம் வருகின்ற 21.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம் மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம் நாளைய தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணிக்கு ஆலய தெற்கு வீதியில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

பரிபாலன சபை.

(CR 40462) A-1



31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (21.07.2023) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

அமரர் வேலுப்பிள்ளை ஸ்ரீதரன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (18.08.2023) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேரி.

(CS 25999) A-1

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்ஸ் முகமூடியுடன் அமெ. கால்பதிக்கத் திட்டம்

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு



கொழும்பு, ஓக.19

**பிரான்ஸ் என்ற முகமூடி அணிந்து இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்கா முயற்சிக்கிறது. திருகோணமலையில் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தை அமைப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என தேசிய புலனாய்வுச் சேவை கடுமையாக எதிர்த்துள்ளது.**

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதுல்கோட்டையில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலை மாவட்டத்தில் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தை அமைக்க பிரான்ஸ் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதியின் குறுகிய நேர இலங்கைப் பயணத்துக்கான நோக்கம் தற்போது வெளிப்பட்டுள்ளது.

திருகோணமலையில் பிரான்ஸ் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை அமைக்கும் கோரிக்கையை தேசிய புலனாய்வுச் சேவை கடுமையாக எதிர்த்து இந்த யோசனை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பிரதான பேசுபொருளாகக் காணப்படும் பின்னணியில் பிரான்ஸுக்கு இடமளித்தால் அது தவறான எடுத்துக்காட்டாக அமையும். பிரான்ஸை தொடர்ந்து அமெரிக்கா, சீனா உள்ளிட்ட பலம்வாய்ந்த நாடுகளுக்கும் இலங்கையில் முகாமிட அனுமதி வழங்க நேரிடும்.

திருகோண மலைக்கு பிரான்ஸ் வரவில்லை, பிரான்ஸ் ஊடாக தனது நோக்கத்தை அடைய அமெரிக்கா முயற்சிக்கிறது.

இலங்கையில் கடற்படை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தை அமைக்க வேண்டிய தேவை பிரான்ஸுக்கு கிடையாது. பிரான்ஸ் என்ற முகமூடி அணிந்து கொண்டு எம்மை ஏமாற்ற முடியாது என்பதை அமெரிக்காவுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறோம் - என்றார். (எ-இ)

# நெல் கையிருப்பு குறைவடைகிறது

## நெல் சந்தைப்படுத்தல் சபை தகவல்

கொழும்பு, ஓக. 19

ஒரு மாதத்துக்கும் குறைவான காலப்பகுதிக்கான நெல்லே தற்போது கையிருப்பில் தம்வசமுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தற்போது 45 இலட்சம் கிலோகிராம் நெல் மாத்திரமே கையிருப்பிலுள்ளது.

நெல் கிடைக்காத காரணத்தால் கையிருப்பு தீர்ந்து வருகின்றது என்றும் இதனால் அம்பாந்தோட்டை நெற்களஞ்சியசாலை மூடப்பட்டுள்ளது என்றும் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விவசாய அமைச்சரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நெல்லுக்கு உரிய விலையின்றி அவை தேக்கமடைந்து அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாயிகள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி3)

# புதிய திட்டம் தயாராகும்வரை நிதிக் கொடுப்பனவு தொடரும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக.19

புதிய திட்டம் தயாரிக்கப்படும்வரை முதியோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் உட்பட 6 இலட்சத்து 47 ஆயிரத்து 683 பேர் தொடர்ந்தும் கொடுப்பனவைப் பெறுவார்கள். 41 ஆயிரத்து 119 சிறுநீரக நோயாளிகள், 88 ஆயிரத்து 602 ஊனமுற்றோர் மற்றும் 5 இலட்சத்து 17 ஆயிரத்து 962 பேர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். எதிர்வரும் நாள்களில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

முதியோர் கொடுப்பனவுகள் தபால் நிலையங்களில் இருந்தும், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் வழங்கப்படும் - என்றார். (எ-இ)



# விகாரை கட்டுமானம் நிறுத்தம் பிக்குகளுக்கு ஆளுநர் விளக்கம்

திருகோணமலை, ஓக.19

திருகோணமலை நிலாவெளி பெரியகுளம் பகுதியில் அமைக்கப்படவிருந்த பௌத்த விகாரையின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பந்தப்பட்ட விகாராதிபதிகளுக்கு கடந்த சிலதினங்களுக்கு முன்னர் தெளிவு படுத்தியுள்ளார்.

பௌத்த விகாரையின் நிர்மாணப்பணிகளை நிறுத்த வேண்டும் என்று கோரி பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்த நிலையில், இனமுரண்பாடு ஏற்படும் என கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, விகாரையின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டன.

இது தொடர்பாக அரசியல்வாதிகள் பலர் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகின்றபோதும், தனது முடிவில் உறுதியாக உள்ளேன் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார். இந்தநிலையில், விகாரையின் விகாராதிபதி விமல தம்மா மஹாநாயக்க தேரரை சந்தித்து விகாரை அமைப்பதால் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக ஆளுநர் தெளிவு படுத்தியுள்ளார்.

நிலாவெளி, இலுப்பைக்குளம் பகுதி மக்களின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்படாமல், எதிர்ப்புக்கு மத்தியில் விகாரை அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலை ஏற்படுவதைத் தடுக்க ஆளுநர் என்ற வகையில் தனது கடமையைச் செய்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# ஜப்பான் இலவச உரம் வவு.வில் விநியோகம்

வவுனியா, ஓக. 19

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக இலவசமாக வழங்கப்பட்ட யூரியா உரம் வவுனியா விவசாயிகளுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 28 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் 13 ஆயிரத்து 375 யூரியா உரப்பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளன. (ச- ரி3-110)

# தன்னிச்சைக்குத் தீர்வில்லை; விரைவில் பணிப்புறக்கணிப்பு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 19

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழில்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது சுகாதார அமைச்சின் பதில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரும் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளருமான ஜி.விஜேசூரியவின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டைக் கண்டித்து இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்பாட்டுக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

இல்லையாயின் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்க நாம் தயார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ச-ரி2)

GMOA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகளைத்...

குருந்தூர்மலைப் பகுதியிலும், அதற்குச் செல்லும் வழிகளிலும் கலகம் அடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இந்தப் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்து அமைப்புகள், சமூகமட்ட அமைப்புகள், பொதுமக்கள், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்று நூற்றுக்கணக்கானோர் இணைந்து இந்தப் பொங்கலில் பங்கெடுத்தனர்.

குருந்தூர்மலை தொல்பொருள் சார்ந்த பகுதியாக இருப்பதாகக் கூறி, அங்கு பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் பின்பற்றவேண்டிய நிபந்தனைகளாகச் சிலவற்றை தொல்பொருள் திணைக்களம் நேற்றுமுன்தினம் பட்டியலிட்டது. இதன்படி, நிலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடும் திறந்த வெளியில் பொங்கலிட வேண்டும், தொல்பொருள் அல்லாத மணல், கல், செங்கல் போன்றவற்றை வைத்து அதன்மேல் தகரம் வைத்து அதன்மேல்தான் தீமுட்ட வேண்டும், தொல்பொருள் சின்னங்கள் மீது உணவு, பழம், தேங்காய் உள்ளிட்டவற்றை வைக்கக்கூடாது, தொல்பொருள்களில் தேங்காய் உடைத்தல் அல்லது பால்போன்றதிரவப்பொருள்களைத் தெளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது போன்ற நீண்ட நிபந்தனைகள் தொல்பொருள் திணைக்களத்தால் விதிக்கப்பட்டன. இவை முற்றுமுழுதாகப் பின்பற்றப்பட்டு பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைக்கு அமைவாக வாழையிலையின் மேல் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூக்கள் என்பன வைக்கப்பட்டு சைவ முறைப்படிமடை பரவப்பட்டது. தொடர்ந்து மக்கள் பக்திபூர்வமாக, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் திரிசூலம் இருந்த வளாகத்தினைச் சுற்றி வலம்வந்து, பக்திப் பாசுரங்கள்பாடி பொங்கல் வழிபாட்டை நிறைவு செய்தனர்.

இதேவேளை - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பொங்கல் நடைபெற்ற இடத்தில்தனியாக பொங்கலிட முயற்சித்த போது தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அதற்குத் தடைபோட்டனர். இதையடுத்து முன்னணியினருக்கும் தொல்பொருள் திணைக்களத்தினருக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதங்களும் இடம்பெற்றன. (அ-ம-246)

## ஏட்டிக்குப்...

பௌத்த விகாரையில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விகாரைகளில் வழிபாடுகளை மேற்கொள்வதற்காக பேருந்துகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் ஏற்றிவரப்பட்டனர். விகாரையைச் சுற்றியும் பொலிஸ் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே அவர்கள் விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். எனினும், ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் வழிபாடு மேற்கொள்ளப்பட்ட பகுதியில் இருந்த கெடுபிடிகள் எவையும் விகாரைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வழிபாடுகளில் இருக்கவில்லை. (அ-ம-246)

## மீண்டும்...

வியல் துறையின் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மூத்த பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பதவியில் நீடிப்பார்.

தனது முதலாவது பதவிக்காலத்தில் கட்டுக்கோப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தை வழிநடத்திய பேராசிரியர் சிறிசற்குணராஜா, பல முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பலரதும் பாராட்டுக்களையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். இந்தநிலையில் அண்மையில் துணைவேந்தர் தெரிவுக்கான புள்ளியிடலில் முதன்மை இடத்தையும் பெற்று, தற்போது மீண்டும் துணைவேந்தராகியுள்ளார். (அ-ம,27,66,125)

## வழிபாடு...

குருந்தூர்மலையில் இனிவரும் காலங்களில் வழிபாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்' என்று வடமாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். பொங்கல் வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றாலும் சில குழப்ப முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்தவகையில் பொங்கல் வழிபாடுகளுக்குரிய பொங்கல் பொருள்களை ஏற்றிவந்த உழவியந்திரம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டதோடு குருந்தூர்மலைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்து நாம் அவ்விடத்துக்குச் சென்று பொங்கல் பொருள்களை எடுத்துவந்து வழிபாடுகளை மேற்கொண்டோம்.

பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போது சுற்றியிருந்த பொலிஸாரின் பாதுகாப்புக்களையும் மீறி எமது வழிபாட்டுப் பகுதிக்குள் நுழைந்த கல்கமுவ சாந்த போதி தேரர் வழிபாடுகளைக் குழப்ப முயன்றார். எனினும் எமது மக்கள் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கோஷமிட்டனர். அதனைத் தொடர்ந்து பொலிஸாருடைய தலையீட்டுடன் அவர் வெளியேற்றப்பட்டார். பொங்கல் வழிபாடுகள் இனியும் தொடர்ந்து குருந்தூர் மலையில் இடம்பெறும். அதற்குரிய தினங்களை நாம் தொடர்ந்து அறிவிப்போம் - என்றார். (அ-ம-246)

## குருந்தூர்...

400க்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. அவர்கள் குருந்தூர்மலையில் வழிபாட்டுக்காகச் சென்றவர்களைத் தீவிரமாகக் கண்காணித்ததுடன், அவர்களின் அடையாள அட்டைகளையும் சோதித்துப் பார்த்தனர். ஊடகவியலாளர்கள் சிலரின் அடையாள அட்டைகளும் பொலிஸாரால் சோதிக்கப்பட்டன. (அ-ம-19,125)

## பொங்கலைக்...

யிட்டதையடுத்து பொலிஸாரால் தேரர் அப்புறப்படுத்தப்பட்டார்.

தமிழர்களின் பொங்கல் வழிபாட்டுக்கு எதிரான பரப்புரைகள் சிங்களக் கிராமங்களில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதனால் நேற்றைய பொங்கல் வழிபாட்டின்போது குழப்பம் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த விடயம் நீதிமன்றத்தின் [illegible] கொண்டு செல்லப்பட்டிருந்ததால் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையில் தீவிரமான பாதுகாப்புப் போடப்பட்டது.

பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு பாரம்பரிய முறைப்படி மடை பரவியபோது அந்த இடத்துக்கு வருகைதந்த சாந்தபோதி தேரர் அது தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன், குழப்பங்களையும் விளைவித்தார். இதையடுத்து தேரருக்கு எதிராக தமிழ் மக்கள் ஓரணியில் நின்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். நிலைமை கைமீறுவதற்கு முன்னர் பொலிஸார் தேரரை சமரசம் செய்து அனுப்பிவைத்தனர்.

ஜூலை மாதம் 14ஆம் திகதி பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றபோது, இதே தேரர் தலைமையிலான சிலர் வழிபாடுகளைக் குழப்பியதுடன் கற்பூரத்தீபத்தை சப்பாத்துக் காலால் மிதித்து மத அவமதிப்பையும் செய்திருந்தனர். இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கொன்று நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-246)

## கூலிப்படையாகச்...

களுக்குச் சேதம் விளைவித்தல், வாகனங்களைத் தீயிட்டு எரித்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 9 சந்தேகநபர்கள் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

'இந்தக் குழுவினர் போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள். போதைப் பொருளை வாங்குவதற்கான பணத்தைப் பெறவே அவர்கள் இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற்று கூலிப்படையாக இவர்கள் செயற்பட்டுள்ளனர்' - என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனவிரத்தினவின் வழிகாட்டலில், யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினரே மேற்படி சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

'அண்மையில் கல்வியங்காட்டுப் பகுதியில் பெண்களின் ஆடை அணிந்து வீடொன்றை நாசப்படுத்தி எரித்த சம்பவத்திலும் இவர்களுக்குத் தொடர்புண்டு. பிறிதொருவரிடம் இருந்து 2 இலட்சம் ரூபா பணத்தைப்பெற்று இந்த வன்முறையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் கீரிமலைப் பகுதியில் தாக்குதல் மேற்கொண்டமை, திருநெல்வேலியில் மருத்துவர் வீட்டில் பெற்றோல் குண்டு எறிந்தமை ஆகிய குற்றங்களுக்கும் இவர்களுக்கும் தொடர்புண்டு. இதற்காக அவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர்' - என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சந்தேகநபர்களிடம் இருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், 2 வாள்கள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தக் குழுவை வைத்து பல்வேறு குற்றச்செயல்களை மேற்கொண்ட பிரதான சூத்திரதாரி டென்மார்க்கில் உள்ள நிலையில், இன்டர்போலின் உதவியுடன் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26,27)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில்
6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம்:
  காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 8147 389
077 9865 457

(CS 25996) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் நீச்சல் போட்டி குடும்பப் பெண்கள் சாதனை


முதலிடம்


இரண்டாமிடம்


மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஓக. 19
வடமராட்சியில் இடம்பெற்ற நீச்சல் போட்டியில் முதல் மூன்று இடங்களைத் தட்டிச்சென்று சாதனை படைத்துள்ளனர் இன்பசிட்டியைச் சேர்ந்த குடும்பப் பெண்கள்.
இன்பர்சிட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வின் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரு பிரிவுகளாக நீச்சல் போட்டி நடத்தப்பட்டது.
இதில் பெண்களுக்கான நீச்சல் போட்டியில் ஒருகிலோ மீற்றர் தூரத்தைக் கடலிலே நீந்திக் கடந்து 3 குடும்பப் பெண்கள் வெற்றிபெற்றுள்ளனர்.
இன்பசிட்டியைச் சேர்ந்த சி. அனுரூபா (வயது -40) ம.தர்சினி (வயது-46) மற்றும் செ. மனோன்மணி (வயது-56) ஆகியோரே முதல் மூன்று இடங்களை யும் முறையே பெற்றுள்ளனர்.
இவர்களுக்கு பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளும் உள்ளனர். இந்த நிலையில் கடல் அலைகளுக்கு சவால் விடும் வகையில் நீந்திச் சாதனை படைத்தமைக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.
அதேவேளை ஆண்களுக்கான் போட்டியில் உ.சாரங்கன் (வயது -16) முதலிடத்தையும், ர.பத்மாகரன் (வயது-33) மற்றும் ந. ராஜேஸ்வரன் (வயது-32) ஆகியோர் முறையே 2ஆவது, 3 ஆவது இடங்களையும் பெற்றுள்ளனர். (ச-ரி3-100)

# பெரமுனவுக்குள் பிளவு: ஜனாதிபதி திறமைசாலி

## வாசுதேவ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 19
சிறிலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தி சிறந்த முறையில் அரசியல் காய்நகர்த்தலை செய்து வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. பொதுஜன பெரமுன இதனை உணரவேண்டும் - இவ்வாறு ஜனநாயக முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார ஊடகசந்திப்பொன்றில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் ஒரு தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும், அமைச்சுப் பதவி இல்லாத பிறிதொரு தரப்பினர் பஸில் ராஜபக்சவுக்கு ஆதரவாகவும் செயற்படுகிறார்கள். பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கி பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி முன்னெடுக்கிறார். பெரமுனவை பிளவுபடுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையாக காய்நகர்த்தலை செய்கிறார். 69 லட்சம் மக்களாணைக்கும், ஜனாதிபதியின் கொள்கைக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது.
பொதுஜன பெரமுனவே தவறை திருத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (ச)

## பெண்...

அவர் கடந்த சில காலங்களாகக் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும், கடன் தொல்லையால் அவதிப்பட்டு வந்தார் என்றும் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில், அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ-ம.60)

## கச்சதீவை...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பிரதமர் நரேந்திர மோடி நிறைவேற்றவில்லை. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகளில், தமிழக மீனவர்களின் மீது இலங்கைக் கடற்படையின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இலங்கைக் கடற்படைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தேர்தலில் நாடாளுமன்றத்தில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்து கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ம-56)


## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.
1. **மனேஜர்** - Lanka Tile Showroom -
ஆண், சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்.
2. Lanka Tile **விற்பனையாளர்** - ஆண்
3. **விற்பனை பிரதிநிதி** சீமெந்து - ஆண்
4. **கணக்குப்பதிவாளர்** - ஆண் / பெண்
மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **குரு ஹாட்வெயார்**
**இல. 175, கரடிபோக்குச் சந்தி - கிளிநொச்சி.**
**0777 435 265**
குறிப்பு:
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது. நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றவுள்ள தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
(CR 40437) A-1


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **24 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
* **நிலப்பரப்பு**
* மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
* பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
* நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
* பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
* நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

**தொடர்பு: 076 057 0354, 076 8260 354**
(CS 25983)A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன்கோயில் முன்பாக **51 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு**
* **பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை



தொடர்பு:- குரு
**0776 234 204, 077 2880 152, 077 076 0389**
(CS 25982)A-1

## கட்டட வேலை

உங்கள் வீட்டினை விரைவாகவும் தரமாகவும் கட்டித்தரப்படும்.
**074 077 1490**

## கருங்கோழி சேவல் விற்பனைக்கு

இடம் - சுண்டுக்குழி
விலை - 1 சேவல் - 5500 /=
**077 192 2010**

## PHYSICS

**A/L - 2023** மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள்
• தனிப்பட்ட / குழு வகுப்புகள் (Home visit)
• Pastpapers மீட்டல்
**070 366 0951**

## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அருகாமையில் கொமட் வசதியுடன்கூடிய அனெக்ஸ் / வீடு தாயும் மகளும் தங்குவதற்கு தேவை.
தொடர்பு: **077 558 1631**

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம். சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
**Viber or Whatsapp**
**0044 7578 626565, 077 251 9150**
Email add: rajasasikumar@gmail.com
(CS 51608) AH-1

## வேலைக்கு ஆள்தேவை

வீட்டு வேலை பார்ப்பதற்கு பெண் வேலையாள் ஒருவர் உடனடியாகத் தேவை.
(தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்)
**076 462 0055**
(CS/51708) AH-1

## மணமகன் தேவை

சுவீடனை வதிவிடமாகக் கொண்ட 1998 இல் பிறந்த மணமகளுக்கு உள்நாட்டில் மணமகன் தேவை.
**074 353 6881**

## வேலையாட்கள் தேவை

மேசன் வேலை, தச்சு வேலை தெரிந்தவர்கள், கூலி ஆட்கள் தேவை
நல்லூர், யாழ்ப்பாணம்
தொடர்பு:
077 5533 601, 071 6933 601

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் உடன் தேவை.
(சமையல் பீட்சா மற்றும் பேக்கரி வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
(உணவு, தங்குமிடம் இலவசம்)
**077 800 8224**

## AC பஸ் நடத்துனர்கள் தேவை

**யாழ் - கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவையில் தொடர்ச்சியாக ஈடுபடும் நிறுவனம் ஒன்றுக்கு AC பஸ் நடத்துனர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.**
சம்பளம் மாதாந்தம் 45000 /- தொடக்கம் 60000/- வரை பெறக்கூடியதாக இருக்கும் ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
**077 711 4226**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org